**கிறிஸ்துவின் ஊழியனாக இருப்பதே உண்மையான சுதந்திரம்.**

- புனித அகாத்தா

இயேசு நமது மரணம், உயிர்ப்புப் பற்றி மூன்றாவது முறையாக முன்னறிவித்தப் பின், எருசலேமுக்கு தமது சீடர்களுடன் செல்லும் வழியில் இந்த வேண்டுகோள் வைக்கப்படுகின்றது. பிற சீடர்களுடன் முட்டிமோதிக் கொள்ளுவதற்கு முன், தங்களுக்குரிய இடத்தை இவ்விரு சீடர்களும் குறித்து வைத்திருக்கலாம். இடத்திற்கு முந்தி கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு.

ஆலயத்தின் பணித் துறையிலும் நீண்ட காலம் பணியாற்றிய நாமும் சில சமயங்களில் அதற்குரிய அங்கீகாரத்தையும் மரியாதையையும் எதிர்பார்ப்பது நமது உரிமை என கருதுகிறோம்.

“உங்கள் வாழ்வு என்பது உங்களை மட்டும் சார்ந்தல்ல” என இம்மாதிரியான தலைவர்களுக்கு யாராவது சொல்ல வேண்டும். “நான்” “நமது” என்ற சுயநிலையைக் கடந்து, பணியாற்றும் போது கடவுளுக்குரிய இடத்தை நமது உள்ளத்தில் தயார் செய்ய வேண்டும்.

இந்த இடத்தில்தான், “ஆண்டவரே, பேசும் உம் அடியேன் கேட்கிறேன்” என நாம் கடவுளை நாட முடியும். யாக்கோபு மற்றும் யோவானைப் போல் துணிச்சலாக வேண்டுகோளை வைப்பது, “ஆண்டவரே, கேளும் உமது அடியேன் பேசுகிறேன்” என்பதாகும்.

யாக்கோபும் யோவானும் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, உண்மையான கிறிஸ்துவத் தலைமைத்துவம் பற்றி இயேசு விவரிக்கிறார். புறவினத்தார் ஆட்சியாளர்களைப் போல் தமது சீடர்கள் இருக்க்ககூடாது (10:42) என்றும் தமது பணிக் காலத்தைப் பின்பற்றி, சேவை மனப்பான்மையையும் தாழ்ச்சியையும் (10:45)கொண்டிருக்க வேண்டும் என்றும் இயேசு விளக்குகிறார்.

**பிறருக்குச் சேவை செய்யும் போது உங்களையே தாழ்த்திக் கொள்ளுங்கள்.** மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் என எதிர்பார்க்காதீர்கள். இதனால் இறை மாட்சியையும் கடவுள் முன் உண்மையான மதிப்பையும் மரியாதையையும் நாடுங்கள். இதுவே உண்மையான மதிப்பும் மரியாதையும். ✝

**வாரம் ஒரு வசனம்**

**பிறருக்குச் சேவை செய்யும் போது உங்களையே தாழ்த்திக் கொள்ளுங்கள்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 42/2018
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

21 அக்டோபர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 29ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



மாதாந்திர கருப்பொருள்:

**தடைகளைக் கடந்து கிறிஸ்துவோடு பயணிக்கிறேன்**

## மற்றவரக்கு ஊழியனாக இருப்பது ...நமது மனப்பான்மை

இன்றைய நற்செய்தியில் (மாற்கு 10:35-45) யாக்கோபும் யோவானும் தங்களது குருவிடம் துணிச்சலான வேண்டுகோளை வைக்கின்றனர்.

“போதகரே, நாங்கள் கேட்பதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும்” (10:35)

“நீர், அரியணையில் இருக்கும் போது எங்களுள் ஒருவர் உமது வலப்புறமும் இன்னொருவர் உமது இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்” (10:37)

## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 அக்டோபர் (ஐப்பசி) மாதத்தின் கருப்பொருள்:*
***நான் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவில் பயணிக்கிறேன்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்**: பொதுக்காலம் 29ஆம் ஞயிறு — சனி 20-10-2018 - ஞாயிறு 28-10-2018

எசாயா: 53: 10 - 11 தி.பா: 32: 4- 5, 18-19, 20 எபிரேயர்: 4: 14 - 16 மாற்கு: 10: 35 - 45

**"உம்மையே நாங்கள் நம்புவதால், உமது பேரன்பு எம்மீது இருப்பதாக" - திபா 32**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 20 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித லொரென்ஸன் ருய்ஸ்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 21 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (தூய ஆவி அருங்கொடை)<br>திருப்பலி (ஆ) (புனித பவுஸினா)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் )<br>**மதியம் 2.00 மணிக்கு பங்கு மேய்ப்புப்பணி பேரவை ( PPA)** |
| திங்கள் | 22 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 23 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 24 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) அன்னை வேளாங்கண்ணி (காடோங்)*** |
| வியா | 25 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 26 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) தி. இ ஆண்டவர் சிற்றாலயம் (மார்ஜெரி)*** |

**பொதுக்காலம் 30ஆம் ஞயிறு**

எரே: 31: 7 - 9 தி.பா: 125: 1- 2ab, 2cd - 3, 4 -5, 6 எபிரேயர்: 5: 1 - 6 மாற்கு: 10: 46 - 52

**"ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்" - திபா 125**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 27 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ரபேல்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 28 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (அன்னை வேளாங்கண்ணி)<br>திருப்பலி (ஆ) (புனித டேவிட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2018 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

i) **ஆலய காணிக்கை**
13 &14 அக்டோபர் ரிம: 9,635.00 தித்தி ரிம: 116.00
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

ii) **உலக தூதுப்பணி ஞாயிறு - 21-10-2018** நம்முடைய இந்த வாரக் காணிக்கைகள் இதற்காகப் பயன்படுத்தப்படும்.
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

iii) **அருட்பணியாளர் சேவியர் அவர்கள் விடுமுறையில்** இருப்பார் அக்டோபர் 14-29 வரை

iv) **ஏழைகளின் சிறிய சகோதரிகள்** நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு (22/23 செப்டம்பர் 2018) வருகை தந்தபோது நிதியாகப் பெறப்பட்ட தொகை **ரிம:14,796.35.** இதற்காக அவர்கள் தங்களது நன்றிகளை நமக்குத் தெரிவித்துகொள்கின்றனர்.

v) **விளக்கவுரை: திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள்**
நாள்: 08-11-2018 (வியாழன்) API, K.L.
நேரம்: மாலை 7.00 எ 10.00 வரை (தொடர்பு: 03-20 26 64 66) அல்லது இணையத்தின்வழி பதிவு https://api.ArcKL.org

**vi) தீபாவளிக்கான உதவிக்கரம் நீட்டும் திட்டம்**: உடை தானம்- வசதி குறைந்த இந்து சகோதர சகோதரிகளுக்கு, சிரம்பான் இந்து சங்கம் உதவி செய்ய திட்டமிட்டுள்ளது. புதிய மற்றும் நல்ல நிலையில் உள்ள பயன்படுத்திய ஆடைகளை வழங்குதல்
அ) புடவை/பஞ்சாபி உடைகள்/சுரிதார்
ஆ) ஆண்களின் ஜிப்பா/குர்த்தா/வேட்டி / சட்டைகள் / கால்சட்டை/உடைகள் தொடர்புக்கு: லெட்சுமி 011 - 10 66 39 59

**vii) திருமணத்தை ஆலயத்தில் ஆசீர்வதித்து முறைப்படுத்திட அழைப்பு**: திருச்சபைக்கு வெளியே திருமணம் புரிந்தோரின் விவரங்களை பங்கு குருவானவரிடம் தெரியப்படுத்துங்கள். அவ்வாறு திருமணம் புரிந்த கத்தோலிக்க உறுப்பினர் நற்கருணை அருளடையாளத்தில் பங்கேற்க இயலாது. குருவானவர் அதற்கான தயாரிப்பையும் வழிமுறையையும் உங்களுக்குத் தருவார். உடனடியாக இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**இன்று திருப்பலியை வழிநடத்திய தூய ஆவி அருங்கொடை உறுப்பினர்களுக்கு நமது நன்றிகள்.**

➢ **கல்லறைகள் ஆசீர்வதித்தல்**

| | | |
|---|---|---|
| 28 அக்டோபர் | மாலை 4.30 மார்ஜெரி | மாலை 5.00 சாகா |
| | மாலை 6.00 கம்போங் செபீர் | |
| 1 நவம்பர் | மாலை 4.30 தித்தி | காலை 9.00 ஃபேரி பார்க் |
| 2 நவம்பர் | மாலை 4.00 புனித மாற்கு கல்லறை | மாலை 4.30 சிகாமட் கல்லறை |
| | காலை 9.45 நீலாய் சியா என் மெமோரியல் | |

➢ **அனைத்துப் புனிதர்கள் மற்றும் அனைத்து மரித்தோர் நினைவு நாள் :**

| | | | |
|---|---|---|---|
| அனைத்து புனிதர்கள் 01-11-2018 | காலை6.45 (ஆங்கிலம்) | மாலை 6.30 (ஆ/சீ/தேமொ) | மாலை 8.30 (தமிழ்) |
| | காலை 7.30 (கார்மேல் மடம்) | பகல் 2.00 (கம்போங் செபிர்) | மாலை 4.30 (தித்தி) |
| அனைத்து மரித்தோர் நினைவு நாள்: 02-11-2018 | காலை6.45 (ஆங்கிலம்) | மாலை 6.30 (ஆ/சீ/தேமொ) | மாலை 8.30 (தமிழ்) |
| | காலை 7.30 (கார்மேல் மடம்) | | |

**ஏழைகளுக்கான பணிக்குழு ( ஏழைகளின் திருச்சபை ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ் )**

- ஆன்மீக உரை - ஏழைகளின் திருச்சபை - அருட்பணியாளர் சேவியர் 03-11-2018 அனைத்து பங்கு மக்களும் இதில் கலந்து கொள்ளலாம். நேரம்: காலை 8.00 - 2.00 (பகல்) வரை பதிவு அனைத்து திருப்பலிகளுக்குப்பின் நடைபெறும்
- உலக ஏழையர்களின் தினம் - நவம்பர் 17 & 18, 2018
கூடுதல் விவரங்களுக்கு: ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016- 611 0681)
- கடந்த வாரம் நடைபெற்ற மருத்துவ முகாமில் ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றி

- **170 ஆம் ஆண்டு நிறைவு - கார்னர் ஸ்டோன் "காஃபி டேபிள் "**புத்தகம் ஒன்றின் விலை ரிம:40.00 திருப்பலிக்குப் பின் அல்லது பங்கு அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம்.
- **பேராயர் ஜூலியன் லியாவ் நம் அனைவரையும் செபிக்க அழைக்கிறார்:** மேய்ப்புப்பணி கடிதம் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. 26-10-2018 (வெள்ளி) மாலை 6.00 மணிக்கு திருப்புகழ் மாலையுடன் மற்றும் திருப்பலி. தொடர்ந்து நற்கருணை ஆராதனை இரவு 10.00 மணி வரை இடம்: புனித யோவான் பேராலயம், கோலாலம்பூர். அனைவரும் வருக!
- **கலாச்சாரம் மற்றும் நாட்டின் வளர்ச்சி -** கண்காட்சி - இடம்: கத்தோலிக்க ஆராய்ச்சி மையம் மற்றும் யுகேஎம் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் கண்காட்சி - நாள்: 24-10-2018 (சனி) காலை 9.30 -4.00(மாலை) இடம்: டேவான் பெர்டானா, யுகேஎம், பாங்கி. நுழைவு இலவசம். தொடர்பு: 03- 20266472 அல்லது மின்னஞ்சல்: events@crc.org.my
- **பங்கு மேய்ப்புப்பணி பேரவை 21-10-2018 (ஞாயிறு) பகல் 2.00 மணி**
இடம்: மினவுதல் தேவாலய மண்டபம்.
அனைவரும் வருக! அதிச உறுப்பினர்கள், பணிக்குழுக்கள், அப்போஸ்தல குழுக்கள், மேய்ப்புப்பணி மற்றும் நிதிக்குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொள்ள அழைக்கிறோம். உங்களுடைய ஆதரவும் செபங்களும் மிகவும் அவசியம்.